**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 216/2023**

**Prosecution witness : அ.சா.1** **Date : 25.11.2025.**

| | |
|---|---|
| **Name : ராஜா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1)புகாரை நான் கொடுத்தேனா என்றால் ஆமாம். புகாரை யார் எழுதி கொடுத்தார்கள் என்றால் போலீசார் எழுதி கொடுத்தார்கள். சம்பவம் நடந்து 5 நிமிடம் கழித்து சென்றேன். என் தம்பி திருப்பூரில் வேலை செய்து வருகிறார். சம்பவம் நடந்த சமயம் திருப்பூரிலிருந்து தான் வந்தார். நானும் திருப்பூரில் இருந்து தான் வந்தேன். எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் 11 மணிக்கு திருப்பூரிலிருந்து கிளம்பினேன். என் தம்பியை அடிப்பட்டவுடன் மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன்.

2) பல்சர் வாகனத்தில் என் தம்பி சென்றார் என்றால் ஆமாம். விபத்து நடந்த சாலை போக்குவரத்து நிறைந்த சாலை என்றால் ஆமாம். விபத்து குறித்து யார் தகவல் சொன்னார்கள் என்றால் நான் என் தம்பிக்கு பின்னால் சென்றேன். இறந்தது குறித்து தகவல் யார் சொன்னார் என்றால் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் சொன்னார். கார் இடிக்கும் போது நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை.

3) பின்னால் 5 நிமிடம் கழித்து வந்து பார்த்த போது என் தம்பி விழுந்து கிடந்ததை பார்த்தேன். விபத்து யாருடைய தவறால் ஏற்பட்டது என்றால் நான் நேரடியாக பார்காததால் சொல்ல முடியாது. ஆனால் அங்கிருந்தவர்கள் கார் மீது தவறு

என்று சொன்னார்கள். மேச்சேரி பக்கமிருந்து கார் மேட்டூர் நோக்கி போகும் போது எதிர்புறத்தில் இரு சக்கர வாகனம் வரும் போது இடது பக்கம் மோதியதா என்றால் இல்லை. வலது பக்கம் மோதியது.

4) நான் விபத்தை யார் நேரில் பார்த்ததாக தெரிந்து கொண்டேன் என்றால் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் சொன்னார். அவர் சொல்லி தான் விபத்து குறித்து தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.26 10:30:24 +0530

Judicial Magistrate No.II,
Mettur.